1st November 1962]

(இ) 1961-ல் அனுமதிக்கப்பட்டுள்ள பம்ப் செட்டுக்கள் எத்தனை ?

(உ) வருடத்தில் எத்தனை மாதங்களுக்குத் தண்ணீர் இறைக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) 47, 50.

(இ) ஒன்றுமில்லை.

(உ) வருடத்தில் சாதாரணமாக ஆகஸ்டு முதல் டிசம்பர் வரை தண்ணீர் இறைக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. ர. நல்லசிவம் : பெர்மிட் இன்னும் கொடுக்காமல் இருக்கக்கூடிய பம்ப் செட்டுக்களுக்கு பெர்மிட் கொடுக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இதையெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

சர்க்காக்கள்

* 1070-பி கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் தச்சுப்பட்டறையில் 1960-ம் வருடம் எத்தனை சர்க்காக்கள் செய்யப்பட்டன ?

(இ) எத்தனை சர்க்காக்கள் விற்காமல் பட்டறையில் கிடக்கின்றன ?

(உ) அவை விற்கவில்லையென்றால் காரணம் என்ன ?

(எ) இதனால் எவ்வளவு ரூபாய் நஷ்டமேற்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 1409 (ஆயிரத்து நானூற்று ஒன்பது).

(இ) இந்த சர்க்காக்கள் எல்லாம் விற்கப்பட்டுவிட்டன.

(உ) இந்தக் கேள்வி எழவில்லை.

(எ) சர்க்காக்கள் விற்பனையில் 1,746 ரூபாய் 66 நயா பைசா நஷ்டம் ஏற்பட்டது.

கூட்டுறவு நிலச்சங்கம் (வடுகபட்டி கிராமம்)

* 1070-க்யூ கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஈரோடு வட்டம் வடுகபட்டி கிராமத்தில் சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் விவசாயிகள் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ?